1972 மார்ச் 23]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், விருதுநகரில் உள்ள கட்டடம், வசதிக் குறைவானதாக இருக்கிறது என்ற காரணத்தினால் விருதுநகரிலேயே வேறு ஒரு வாடகைக் கட்டடத்திற்கு மாற்றும் யோசனைதான் அரசின் பரிசீலினையில் உள்ளது.

(இ) சாத்தூருக்கு மாற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு எஸ். அழகுத் தேவர் : தலைவர் அவர்களே இந்தப் பதிவாளர் அலுவலகம் விருதுநகரில் இருக்கிறது. சாத்தூர் பெரிய தாலூகா. அந்தத் அலுவலகத்தை சாத்தூருக்கே அதை மாற்றி அமைக்க யோசிப்பார் களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, தற்போது அப்படி மாற்றும் திட்டம் எதுவும் இல்லை.

திரு சௌடி எஸ். சுந்தரபாரதி: அந்த அலுவலகத்தை வேறு எங்காவது மாற்றவேண்டுமென்ற வேண்டுகோள் வந்ததா ? அப்படியானால் அந்த வேண்டுகோளைப் பரிசீலிக்கிறபோது—இப்போதுள்ள இடமே அந்த மாவட்டத்தின் மையமாக இருப்பதனால் அந்த இடத்திலேயே இருக்க முடிவு செய்வார்களா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : யாரிடத்தில் இருந்தும் வேண்டுகோள் வரவில்லை. விருதுநகரில் இப்போதுள்ள இடம் வசதியில்லாது இருக்கிற காரணத்தினால் அதே ஊரில் வேறு வாடகைக் கட்டிடத்திற்கு அந்த அலுவலகத்தை மாற்றத்தான் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சாத்தூர் தாலுக்கா பெரியதாக இருக்கிறது. அந்தத் தாலுக்கா பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட முயற்சிக்கிறபோது, அந்தப் பக்க மக்களுடைய கோரிக்கையையும் கருத்தில் வைத்து சாத்தூரிலேயே கட்டடம் கட்ட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தற்போது அதற்கு விருதுநகரில் சொந்தக் கட்டடம் கட்டும் யோசனை இல்லை. வாடகைக் கட்டடத்தில்தான் மாற்றி அமைக்க இருக்கிறோம். சொந்தக் கட்டடம் கட்ட யோசிக்கும்போது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலிக்கப்படும்.

சென்னையில் அரிசி கைப்பற்று

*655 வினா—திரு என். டென்னிஸ் : மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் தேதி அளவில் வணிகர்களிடமிருந்து பெருமளவு அரிசியை காவல் துறையின் உணவுப்பிரிவு கைப்பற்றியதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை மாநகரில் அரிசி மண்டி ஒன்றில் கணக்கில் வராது இருப்பில் வைத்திருந்த சுமார் ரூபாய் ஐம்பதினாயிரம் மதிப்புடைய 669 அரிசி மூட்டைகள் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ஆம் நாளன்று சென்னை குற்றப்புலனாய்வுத் துறை உணவுப் பிரிவினால் கைப்பற்றப்பட்டன.

திரு ஜே. ஜேம்ஸ்: இம்மாதிரி காவல்துறையினர்களாலும், பறக்கும் படையினர்களாலும் பறிமுதல் செய்யப்படுகிற தானியங்களுக்கு ஒழுங் காக ரசீது கொடுக்கப்படுவதில்லை என்கிற புகார் இருக்கிறது. இதை அரசு கவனித்து ஒழுங்குபடுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொதுவாக இப்படிக் குற்றம் சாட்டுவது சரியல்ல. குறிப்பிட்ட இடத்தில் எங்காவது ஒழுங்கீனம் நடை பெற்றிருந்தால் குறிப்பிட்டு எழுதினால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 1971-ஆம் ஆண்டிலே இப்படி எத்தனை மண்டிகளைப் புலனாய்வு செய்தார்கள்? அதனால் கிடைத்த பயன்கள் என்ன? இப்படி பறிமுதல் செய்யப்படுகிற தானியங்களை—ஏலத்தில் விடுகிறார்களா அல்லது அப்படியே வைத்திருந்து கெட்டுப் போக விடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆண்டு முழுவதும் நடத்தப் பட்ட சோதனைகளைப் பற்றிய விவரம் இல்லை. பொருள்களை—நீதி மன்றத் தீர்ப்பு வரும்வரை வைத்திருக்கிறார்கள். கணக்கு ஒழுங்காகக் கொடுப் பார்களானால் திருப்பிக்கொடுத்துவிடுகிறார்கள். லெவிக்குக் கொடுக்காமல் இருந்தால் அதை வசூல் செய்து கொண்டு மீதியை அவர்களிடமே திருப்பிக்கொடுத்துவிடுகிறார்கள்.

திரு எம். சுரேந்திரன்: சென்னை நகரில் ஒரு குறிப்பிட்ட தேதியில் பிடிக்கப்பட்ட அரிசி மூட்டைகள் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டுள்ளது சென்னை நகரில் வேறு எந்தெந்த இடங்களில் இப்படி பிடிக்கப்பட்டிருக் கிறது. அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தனிக் கேள்விபோட்டால் விவரம் அளிக்கலாம். முதல் கேள்வி குறிப்பிட்ட தேதியில் பிடிக்கப்பட்ட அரிசி விவரம் பற்றியதுதான்.

திரு. துரைமுருகன்: 1971-ஆம் ஆண்டு ஜூன் 28-ம்தேதி ஒரு வணிகரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட அரிசி விவரம் தந்தார்கள். அந்த வணிகரின் பெயர் என்ன என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே தங்கள் அனுமதியுடன் அந்த வணிகரின் பெயரைச் சொல்கிறேன். திருப்பள்ளித் தெருவில் நெ. 70-இல் உள்ள திரு ஜி. கிருஷ்ணசெட்டி.

1972 மார்ச் 23]

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பு வருகிற வரையில் அரிசி அப்படியே வைக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வைத்திருந்தால் அரிசி கெட்டுவிடுமே, ஆகவே அதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பு வருகிற வரையில் அரிசியை எடுத்து உபயோகிக்க முடியாது. அப்படி உபயோகித்துவிட்டால், நீதிமன்றத்தின் தீர்ப்பு வியாபாரிக்குச் சாதகமாக இருந்துவிட்டால் நாம் உபயோகித்த அரிசி—முதல் தரமோ இரண்டாம் தரமோ—திருப்பி கொடுக்கவேண்டியிருக்கும்.

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தவறுதலான வழிகளில் நடக்கக்கூடிய வர்த்தகர்களை—அதாவது இப்போது சொன்னார்களே திரு. கிருஷ்ண செட்டி போன்றவர்களை—அரசின் ' பிளாக் லிஸ்டில் ' வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே. அப்பேர்ப்பட்டவர்கள் கணக்குகள் சரியாக வைக்கவில்லையென்பதாகப் புகார். கணக்கு சரியாக வைத்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில்லை. ஆகவே அவர்களை ' பிளாக் லிஸ்டில் ' வைக்கத் தேவையில்லை. மேலும் அரசாங்கம் வாணிபத்திற்கு ஒன்றும் தருவதில்லை. அப்படி கொடுப்பதாய் இருந்தால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

Quartz crushing factory at Jagir Ammapalayam

* 656 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that Government Quartz Crushing Factory at Jagir Ammapalayam, Salem has been closed;

(*b*) the steps taken to reopen it; and

(*c*) the compensation paid to the affected workers?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) டான்சி படிக்கல் பொடி செய்யும் தொழிற்சாலையைத் திறந்து நடத்தும் உத்தேசம் இல்லை.

(உ) தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய ஒரு மாத கால அறிவிப்புக்குப் பதிலாக ஒருமாத சம்பளமும், ஆட்குறைப்பு நட்ட ஈட்டுத் தொகையும் வேலையிழந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. மொத்தம் கொடுக்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகை ரூ. 3,739·40 (ரூபாய் மூன்றாயிரத்து எழுநூற்றி மூப்பெத்தொன்பதும் பைசா நாற்பது மட்டும்).

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, சேலத்திற்கு அருகில் இருக்கக்கூடிய ' க்வார்ட்ஸ் க்ரஷிங் பேக்டரியில் ' எத்தனை பேர் பணியாற்றினார்கள்? அவர்கள் பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில்